1987 மார்ச் 3]

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்,

22—(*வினா எண். 8126) திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சிக்கு உலக வங்கியின் துணையோடு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆலங்குடி பேரூராட்சி ஆண்டுக்காண்டு மழை பொய்த்து விடுகின்ற காலங்களில் கடுமையான வறட்சிக்கு இலக்காகி, குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அது ஒரு ‘டவுன் பஞ்சாயத்து’. குடிநீர் வழங்குவதற்காக மதிப்பீடு தயாரிக்ப்பபட்டு 5, 6 ஆண்டுகளாக அது தாமதமாகிக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்ட போது இந்த விவரத்தைத் தெரிவித்தார்கள். மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 5, 6 ஆண்டுகளாக தாமதமாகிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அந்தக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற இந்த ஆண்டு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவாகளே, இந்த ஆண்டு மழை பொய்த்துப்போன ஆண்டு என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, எல்லா இடங்களிலும் குடிதண்ணீர் தர இந்த அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து வருவதை நேற்றே சட்டமன்றத்தில் நான் தெரிவித்திருக்கிறேன். திட்டங்கள் வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதற்கான உதவிகளை உலக வங்கியிடம்கூட கேட்டிருக்கிறோம் ; அவர்களிடமிருந்து இன்னும் அறிவிப்பு வரவில்லை. இருந்தாலும் அரசு எல்லா மக்களுக்கும் தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறபோது அப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளையும் அணுகிக் கேட்டபோது அந்தக் கோப்பானது கிரவுண்ட் வாட்டர் சான்றிதழ் ஒன்று வேண்டுமென்று ஒரே காரணத்திற்காக மட்டும் தேங்கி இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலில் எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோப்பில் உள்ள குறைகளை நீக்கி இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள ஆலங்குடி பேரூராட்சி இந்த உலக வங்கித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. உலக வங்கி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் அந்தப் பதிலை நான் சொல்ல வேண்டியிருந்தது. அடுத்தாற்போல் வருகிற ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்காடு வட்டம், ஆற்காடு மற்றும் திமிரி ஒன்றியங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

23—(*வினா எண். 9330) திரு. த. பழனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டம், ஆற்காடு ஒன்றியம், திமிரி ஒன்றியம், முப்பதுவெட்டி, பூங்காடு, சர்வந்தாங்கல், புன்னைப்பாடி, குஞ்சிரப்பந்தாங்கல், லாடாவரம், அத்தித்தாங்கல், கல்லேரி, கரிவேடு, வெம்பேடு, கே. வேலூர், கீழ்பாடி, பழையனூர், கன்னியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துகிற எண்ணம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக தனித்தனியாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அந்தத்